**பாதுகாப்பு அமைச்சு**
**வளிமண்டலவியல் திணைக்களம்**
**<u>வளிமண்டலவியல் உதவியாளர் தரம் III பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல்.</u>**

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள வளிமண்டலவியல் உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பதவியின் தன்மை :

I. இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியத்திற்குரியதாகும். மேலும், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / விபத்துற்று இறக்கும் ஆண்களின் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளின்படி, உரிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செலுத்தப்பட வேண்டும். வளிமண்டலவியல் உதவியாளர் தரம் III பதவிக்கே ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

II. அரச நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் படி, இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 40,000 - 10x450 - 10x490 - 10x540 - 12x590 – 61,880/- (PL – 1 - 2025) ஆகும். (அரச நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை III இன் விதிகளுக்கு அமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.) நியமனம் பெற்ற திகதியிலிருந்து 03 ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைத் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். (நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதுடன், தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர் பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்.)

III. பணிகள் மற்றும் பொறுப்புகள் :

(அ) வளிமண்டலவியல் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலக வளாகங்களை சுத்தப்படுத்துதல், அலுவலக காணியை சுத்தப்படுத்துவதற்கும் பராமரிப்பு பணிகளுக்கும் உதவுதல், வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உபகரணக் கூட்டை (Stevenson Screen/Instrument Enclosure) சுத்தப்படுத்துதல் மற்றும் அதனை பரிந்துரைக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக பேணுதல்.

(ஆ) வளிமண்டலவியல் உபகரணங்களைச் சுத்தப்படுத்துதல் மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல். வளிமண்டலவியல் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களில் வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

(இ) இரவு நேரத்தில் பிரதேச அலுவலகங்களின் உபகரணங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

IV. கடமைகள் முறைவழியாக (Shift basis) ஒதுக்கப்படும் என்பதுடன், இரவு முறைவழிக் (Night shifts) கடமைகளையும் ஆற்ற வேண்டும்..

03. தகைமைகள் :

அடிப்படைத் தகைமைகள்:

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. மிகச்சிறந்த நற்பண்புகளைக் (நன்னடத்தை) கொண்டவராக இருத்தல் வேண்டும்
III. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 20.07.2026 அன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றில் ஏற்கனவே நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.)
IV. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் (Credit passes) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (உபரிப் பாடங்கள் நீங்கலாக).

உடற்தகமைகள் :

V. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும். நியமனத்தின் பின்னர் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையின் போது, சேவைக்கான தகுந்த உடல் மற்றும் மனத் தகுதி இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால், அவர் இப்பதவிக்கு தகுதியற்றவராகக் கருதப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

VI. பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காகத் தேவைப்படும் அனைத்துத் தகைமைகளும் 20.07.2026 அன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

04. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 20.07.2026 அன்று பி.ப. 4.15 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு ”வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம், இல. 383, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பக் உறையின் மேல் இடதுபுற மூலையில் ”வளிமண்டலவியல் உதவியாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம்” என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைத் தத்தமது நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

05. மொழித் தேர்ச்சி:

அரச நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதன் அனுசாங்க சுற்றறிக்கைகளுக்கு அமைவாக, உரிய மட்டத்திலான இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உரிய மட்டத்திலான இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள், தகைமைகளைப் பூர்த்தி செய்யும் வரை நிறுத்தி வைக்கப்படும். .

06. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் தெளிவான நிழற்படப் பிரதிகளை (Photocopies) தங்களது விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். (மூலப்பிரதிகள் அல்ல.)

I. பிறப்புச் சான்றிதழின் பிரதி
II. தேசிய அடையாள அட்டையின் பிரதி
III. கல்வித் தகைமைகள் மற்றும் பயிற்சிகளை (பெற்றிருப்பின் மாத்திரம்) உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களின் பிரதிகள்
IV. சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இருப்பின் மாத்திரம்)
V. கிராம அலுவலரினால் (Grama Niladhari) வழங்கப்பட்ட வதிவிடம் மற்றும் நன்னடத்தைக்கான சான்றிதழ் (கடந்த 06 மாதங்களுக்குள் பெறப்பட்டது)
VI. அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் (Character certificates) இரண்டு

07. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்திலும் மற்றும் நியமன அதிகாரி கோரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை (Originals) சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

08. இந்அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை எவ்வகையிலேனும் உறுதிப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

09. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிப் பாடங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தப்பாடற்ற தன்மைகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பு:

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணச் செலவுகள் அல்லது வேறு எந்தவொரு செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

ஏ. எல். கே. விஜேமான்கே
பணிப்பாளர் நாயகம் (பதில்)
வளிமண்டலவியல் திணைக்களம்
15.06.2026